ஊடக்கம்.
3

ரவர். ...க்கம்.

ஆயுளைக் ... 1

ை வை (சென்ற மாத தொடர்ச்சி.) 3

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா. ... 1

வைதிகைய வால்மீகி ... ணிக்கான் ...

Vol.14. | JANUARY 1952.

11 FEB 1952
MADRAS

श्रीसुधाब्धिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
...श्वराश्रया विभातु वैद्यचंद्रिका॥

...ண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
...ர்: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

L 8 ... N39 ...
N59. 14-1
19959

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள்
எங்கள் தலைமை வைத்யர்

P. M. வாரியரை

நேரிலோ, தபால் மூலமாகவோ

யோஜனை கேட்டு பலன் அடையலாம்

நாரஸிம்ஹ ரஸாயனம், க்ஷீரபலா

முதலிய மருந்துகளின் சிறப்பு தெரிந்ததே

எங்கள்

"பாடாதி சூரணம்"

பல்லின் ஈறில் சீ வருவது, ரத்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் ஈறு சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், ஈறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூரணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து ஈறிலும், பல்லிலும் தடவி அழுந்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வெந்நீரினால் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

Manager,

Arya Vaidyasala, Kottakal P. O.,
S. MALABAR.

...ளடக்கம்

— ...க்கம்

...ரவர். 1

2. மூலை (சென்ற மாத தொடர்ச்சி.) 3

3. கேள்வியும்—பதி... வழியை வால்மீகி ... ணித்தான் 1
(ஸ்ரீ V. B. நடரா[illegible] திருச்சி.)

௨

"மிக அரிய சந்தர்ப்பம்"

நமது தேசத்தில் மஹரிஷிகள், சித்தர்கள் காலத்திலேயே பெரிய பெரிய மஹாநாடுகள் நடந்துவந்ததாக சரகம் சுச்ருதம் முதலிய நூல்களிலிருந்தே தெரியவரும். அக்காலத்தில் சாஸ்திர சர்ச்சை ஆராய்ச்சி வழிகளையே முக்கிய லக்ஷியமாகக்கொண்டு "தத்வித்ய ஸம்பாஷை" என்ற பெயருடனும் நடந்துவந்தன. தற்காலம் ராஜீயச் சிக்கல்களும் பல நமது முன்னிலையில் தோன்றி நம்மை எவ்வழியிலும் முன்னேற முடியாமல் திகைக்கச் செய்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் நமது சமூக ஒத்துமையும், ஒத்துழைப்பும் பல மேதாவிகளின் ஆலோசனையும்தான் நம்மை நேர்வழியில் செலுத்த உதவும் என்பதை வைத்ய நண்பர்கள் எல்லோரும் உணர்ந்து அவரவர்களின் பல அலுவல்களையும் இரண்டு நாள் நிறுத்திவைத்துக்கொண்டு மஹாநாட்டின் முக்யத் தன்மையைக்கருதி சமூகத்தின் பலஹீனத்தைக் காண்பிக்கும் மாதிரியில் நடந்துகொள்ளாமல் கட்டாயம் ஆயிரக்கணக்கில் தங்களுடன் தங்களைச் சேர்ந்தவர்களையும் உத்ஸாஹத்துடன் அழைத்துவந்து மஹாநாட்டைச் சிறப்பித்து நமது முன்னிலையில் இருக்கும் பிரச்னைகளை தீர்த்துத்தரக் கோருகிறோம். பல நண்பர்கள் வித்வான்கள் ஒன்றுசேர இதுவே அரிய சந்தர்ப்பம். ஒவ்வொரு வைத்யர்களின் வாழ்வில் இவ்விரண்டு நாள் மஹாநாடு மிக அரிய சந்தர்ப்பம் என்பதை உணருங்கள். விஷய விவரம் பின்புறம் சேர்க்கப்பட்டிருக்கிறது. வரும் ரயிலையும் விலாசத்தையும் உடனடியாக புதுக்கோட்டை மஹாநாட்டுக் காரியதரிசிக்கு எழுதுங்கள். மிக ஆவலுடன் எல்லோருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

டபெறுகிறது.

வைத்ய வாசஸ்பதி, பண்டிட் P. S. ராமசர்மா அவர்கள் தலைமையில் இவ்வருஷத்திய மஹாநாட்டை மார்ச்சு 8-9 தேதிகளில் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

முதல் நாள் மாலை (8-3-52) தமிழ் நாட்டிலுள்ள ஆயுர்வேத வைத்யசாலைகள் மஹாநாடு ஒன்று நடைபெறும். அதில் ஆயுர்வேத வைத்யசாலைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆலோசிக்கப்படும்.

8-3-52 *காலை 9 மணிக்கு மஹாநாடு ஆரம்பிக்கப்படும்.*
காலையில் மஹாநாடு ஆரம்ப உரை.
வரவேற்புரை, தலைவர் பேருரை.

மாலை 3-மணிக்கு ஆயுர்வேத வைத்யசாலைகள் மஹாநாடு திறப்பு உரை — தலைவர் பேருரை.

இரவு 8-மணிக்கு விஷயாலோசனைக்கூட்டம்.

9-3-52 *காலை 8-மணிக்கு சாஸ்திர சர்ச்சை.*
(1) *பிரமேஹங்கள்.*
(2) *ஆமவாதம்.*

மாலை 2-மணிக்கு தீர்மானங்கள்.
நிர்வாஹ ஸமிதி தேர்தல்.
மற்ற விஷயங்கள்.

எல்லா அங்கத்தினர்களுக்கும் தனியே அழைப்பிதழ் அனுப்பப்படும். ஒருவேளை அவை கிடைக்கத் தவறினாலும் எல்லா அங்கத்தினர்களும் தங்களுக்குத் தெரிந்த வைத்ய நண்பர்களையும் அழைத்துக்கொண்டு மஹாநாட்டிற்கு வந்திருந்து சிறப்பாக நடத்தித்தரக் கோருகிறோம்.

காரியதர்சி,
லக்ஷ்மி டிஸ்பென்ஸரி,
கீழ ராஜவீதி புதுக்கோட்டை.
1—2—52.

வரவேற்புக் கமிட்டியார்

மூவர்.

(சென்ற மாத தொடர்ச்சி.)

சென்றபோது அவர்கள் போன வழியை வால்மீகி வர்ணித்துள்ளார். மகாபாரதம் ஸபாபர்வம் ராஜஸூய யாகப் பிரகரணத்தில் நான்கு பாண்டவர்களும் நான்கு திக்கில் திக்விஜயம் செய்யும் பொழுது அவர்கள் சென்ற தேசங்கள் காணப்படுகின்றன. இன்னும் சில முக்கிய நூல்களிலும் பூகோளம் காணப்படுகிறது. எல்லா நூல்களையும் எடுத்துக் காட்டுவதாகில் மிக விரியுமாதலால் இங்கு மகாபாரதத்தை மாத்திரம் எடுத்துக் காட்டுகிறேன். வடக்கு திக்கை ஜெயிக்கப் புறப்பட்ட அர்ஜுனன் டில்லியிலிருந்து (இந்திரப்பிரஸ்தத்திலிருந்து) முதலில் "குலிந்தம்" என்ற தேசம் சேர்ந்தான். இது ஹிமாலய மலையிலுள்ளது. பர்மா, சைனா, தேசங்களும் ரஷியா போன்ற தேசங்களும் அவனுடைய வடக்கு திக்கு யாத்திரையில் அடங்கியிருந்ததாகத் தெரிகின்றது. ஸிம்ஹபுரம் (இதுவே சிங்கப்பூர்) ஸுமாலா (இதுவே மலேயா) ஸஹ்யாம் (இதுவே ஸயாம்) காம்போஜம் (இதுவே கம்போடியா) ரிஷிகம் (இதுவே ரஷ்யா) உத்தர ரிஷிகம் (இதுவே டைக்கு ரஷ்யா) சீனம் (இதுவே சைனா) என்ற தேசங்களும் இன்னும் தற்காலம் நாம் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பல தேசங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் விசேஷமென்னவெனில் அந்த தேசங்களில் சிலவற்றில் க்ஷத்திரியர்கள் அரசாண்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே பாண்டவர்கள் காலத்திலும் இந்தியாவுக்கு வெளி தேசங்களில் க்ஷத்திரியர்கள் இருந்து வந்தது தெளிவாகின்றது. முன் சொன்ன மனுஸ்மிருதி வசனங்களாலும் மகாபாரத விவரத்தாலும் இந்தியாவுக்கு வெளி நாடுகளிலும் இந்தியாவில் தற்காலம் போல வர்ணாசிரமங்கள் இருந்தனவென்றும் அவைகளோடு ஸம்ஸ்கிருத பாஷையும் பரவியிருந்ததென்றும் அறிய முடிகின்றது. ஆகவே ஐரோப்பிய பாஷைகளிலும் தற்காலம் நாம் ஸம்ஸ்கிருத சொற்கள் மலிந்திருப்பதைக் காணுகின்றோம். மாதா-Mother—ப்ராதா-Brother—கௌ :- Cow—பந்தா :- Path—ஜ்யாமிதி-Geometry—த்ரி ஜ்யாமிதி - Tri Gonometry முதலிய பாஷைச் சொற்களும் கலை சொற்களும் ஆங்கில பாஷையிலும் கலைகளிலும் கலந்திருப்பது கண்கூடு. மலேயா, சிங்கப்பூர், முதலிய பிறதேசங்களில் இந்திய நாகரிக சின்னங்கள் தற்காலம் காணப்படுவதற்கும் காரணம் இதுவே. அதாவது உலகம் முழுவதுமே ஓர் காலத்தில் ஒரே நாகரீகத்தை யடைந்திருந்ததென்றும் காலக்கிரமத்தில் அந்த நாகரீகம் சிதைவுற்று தற்காலம் இந்தியாவில் மாத்திரம் அந்தப் பழைய நாகரீகம் மிஞ்சியிருப்பதும் இங்கும் காலக்கிரமத்தில் அந்நாகரீகம் க்ஷீணித்து வருகிறது

என்பதும் கண்கூடு. வெளி தேசங்களில் காணப்படும் பழைய நாகரீக சின்னங்கள் தென்படுவது இந்தியாவிலிருந்து சென்ற ஜனங்கள் அங்கு குடியேறி தங்கள் நாகரிகத்தை அங்குபரப்பினார்கள் என்று தற்காலம்ஆராய்ச்சியாளர்கள்நினைப்பதுமுன்சொன்ன வசனங்களுக்குப் பொருந்த மாட்டாது. ஆகவே இந்தியாவில் போலவே அங்கும் பழைய நாகரிகம் இருந்ததாகவும் அது நாளடைவில் பலகாரணங்களால் அழிவுற்றதாகவும் சொல்லுவதுதான் நம்முடைய நூல்களை யொட்டிய சரித்திரமாகும். ஆகவே உலகம் ஒரேபாஷை ஒரே நாகரிகம், என ஆதியிலிருந்ததெனவும் அந்த பாஷையின் பல மாறுபாடுகளே தற்காலமுள்ள பல பாஷைகள் எனவும் நினைக்க சாத்தியமாகின்றது. அந்த முதல் பாஷை ஸம்ஸ்கிருதமாகும், ஆதி மக்கள் பேசி வந்த பாஷையுமதுவே. நாமாக இந்த விஷயத்தை ஊஹித்து எழுதவில்லை. சந்திரிகையில் வெளிவரும் வியாஸங்கள் தகுந்தப் பிரமாணமின்றி எழுதப்படமாட்டாதென்பதை ஏற்கனவே தெரிவித்துள்ளோம் அதிலும் சைன யாத்ரிகர், P. C. ரே, கணநாத் சேன், போன்றவர்கள் சொல்லும் யுக்தி வாதங்களை அனுசரித்து நாம் பிரமாணம் கொள்ளுவதில்லை வைஷ்ணவ சமயத்தினராலும் பிற மதத்தினராலும் பிற ஆக்ஷேபமின்றி ஒப்புக்கொள்ளக்கூடிய ஒப்புயர்வற்ற பாண்டித்யம் பெற்ற ஸ்ரீ நிகமாந்தமகா தேசிகன் எழுதியுள்ள ஸேச்வரமீமாம்ஸா 1—1—12-ல் அடியில் கண்ட வாக்யம் காணப்படுகின்றது.

संस्कृत योनितयैव तावत्प्राकृतादीनि अभियुक्तैः अनुशिष्यन्ते। अपभ्रंशः इत्येवतेषां नाम। अस्य तु संस्कृतमित्येव। एवं अनादौ संस्कृते वर्तमाने अन्यासां उदयविलयभाजां भाषाणां संभव :।

இதன் பொருள் ஸம்ஸ்கிருத பாஷைதான் மற்ற எல்லா பாஷைகளுக்கும் பிறப்பிடம் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்துதான் மற்ற எல்லா பாஷைகளும் உண்டாயின. இது பெரியோர்கள் ஒப்புக்கொண்ட விஷயம். மற்ற எல்லா பாஷைகளுக்கும் "அபப்ரம்சம்" எனப் பொதுப்பெயர். ஆனால் ஸம்ஸ்கிருத பாஷைக்கோவெனில் ஸம்ஸ்கிருதம் அல்லது சீர்திருந்திய பாஷை என்றே பெயர் மற்ற பாஷைகளுக்கு அந்தந்த தேசத்தை யொட்டியே பாஷைபெயர் வைக்கப்பட்டுள்ளது. உதாஹரணமாக தமிழ் நாட்டிலுள்ள பாஷைக்குத் தமிழ் பாஷை. தெலுங்கு நாட்டை யொட்டிய பாஷைக்குத் தெலுங்கு பாஷை. கன்னட தேசத்தை யொட்டிய பாஷைக்குக் கன்னட பாஷை, இவ்விதமே அந்தந்த நாட்டை யொட்டி அந்தந்த பாஷைக்குப் பெயர் இடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத பாஷை ஒரு நாட்டிற்கு மாத்திரம் சொந்தமான பாஷையாகாததுபற்றி அதாவது தேவ லோகங்கள், மனித லோகங்கள் முதலிய சகல லோகங்களுக்கும் பொதுவான பாஷையானதுபற்றி தமிழ் பாஷை, தெலுங்கு

பாஷை, என்பன போன்று தேசத்தை யொட்டி பாஷைக்குப் பெயர் ஏற்படுவது போன்ற ரீதியில் இராமல் இதைப் பொதுவாக ஸம்ஸ்கிருத பாஷையென்றே அழைக்கின்றனர். உலகம் அநாதி. அதுபோல ஸம்ஸ்கிருத பாஷையும் அநாதி. அதாவது மற்ற பாஷைகளுக்கு உத்பத்தியான காலம் சொல்லக்கூடுமாயினும் ஸம்ஸ்கிருத பாஷை எப்பொழுது உண்டாயிற்று என்ற பிரச்னைக்கே இடமில்லை. மற்ற பாஷைகள் உண்டாவதும் வ அழிவதும் இயல்பு, என்பது திரண்ட பொருள்.

பாஷை என்பது என்ன ?

பாஷை என்பது மனிதர் ஒருவருக்கொருவர் தன் கருத்தைப் பிறருக்குப் போதிக்க அமைந்துள்ள நாகரிகமான சாதனமாகும். சித்ரங்களாலும் ஜாடைகளாலும் தன் கருத்தைப் பிறருக்கு போதிக்க முடியும். ஆனால் அது நாகரீக சாதனமாகாது. இது ஆரம்பத்தில் பேச்சு முறையில் அமைந்து பிறகு இலக்கியங்களிலும் அமையப்பெற்றுப் பேசும் சொற்களென்றும், இலக்கியச் சொற்களெனவும் பிரிவுபட்டது உதாஹரணமாக தமிழில் "நீர்" என்பது தண்ணீரைக்குறிக்கும் பாஷைச் சொல்லாகவும் ' புனல்" என்பது அதே பொருளைக் குறிக்கும் இலக்கியச் சொல்லாகவும் இருக்கிறது. இலக்கிய வாசனையே யில்லாத தமிழ் பேசும் தமிழனிடத்தில் புனல் என்று பேசினால் பொருள் விளங்காது. இது போலவே எல்லா பாஷைகளிலும் பார்க்கலாம். ஆகவே இலக்கியங்களில் வேறு பாஷைகளிலுள்ள சொற்கள் கலந்திருப்பது சாத்தியமாயினும் பல பரம்பரையாக இலக்கிய வாசனையற்ற தமிழ் ஜனங்களின் பேசும் பாஷையில் மற்ற பாஷையின் சொற்கள் கலக்கக் காரணமேயில்லை. தமிழ் பேசும் பாஷையில் "தூண்" என்ற சொல் கம்பத்தைக் குறிக்கும் சாதாரண சொல்லாகும். கம்பத்தைக் குறிப்பதற்குப்பேசும் பாஷையில் வேறு சொல் கிடையாது. இலக்கியங்களில் வேறு சொல்லிருந்த போதிலும் பேச்சில் இந்த ஒரு சொல்லே பாமர ஜனங்களாலும் பண்டிதர்களாலும் உபயோகப்படுகிறது. இது "ஸ்தாணு" என்ற வடமொழிச் சொல்லின் திருபே. இவ்விதமே "பாதை" என்ற தமிழ் சொல்லும் பாமரர்கள் முதல் உபயோகிக்கும் சொல்லாகும். இச்சொல்லும் "பந்தா" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து உண்டானதே. நீரம், மீனம், குடம், போன்ற பல சொற்கள் வடமொழியிலும் தென் மொழியிலும் சற்றும் மாறுபாடு இல்லாமலே காணப்படுகின்றன. பேசும் தமிழில் பல வடமொழி சொற்கள் காணப்படுவதால் வடமொழியும் பேசும் பாஷையாக இருந்ததென ஊகிக்கவும் முடிகின்றது. பாலி, ஹிந்தி, முதலிய பாஷைகள் அனைத்தும் ஸம்ஸ்கிருதமென்பது நிச்சயம்.

பாஷைச் சொற்களை ஸம்ஸ்கிருதம் ஏற்குமா ?

தமிழ் நீங்கலாக மற்ற இந்திய பாஷைகள் அனைத்தும் ஐரோப்பிய பாஷைகளும் ஸம்ஸ்கிருதத்தை ஒட்டியவையென்றும் அல்லது ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து பிறந்தவை என்றும் இது போன்ற விஷயங்களில் விவாதம் இல்லை. ஆப்கானிஸ்தானத்திலும், அதற்கும் இந்தியாவிற்கும் நடுவிலுள்ள மலைப்பிரதேசங்களிலும் வடமேற்கு மாகாணத்திலும் பேசப்பட்டு வரும் புஷ்டு என்ற பாஷையானது ஸம்ஸ்கிருத பாஷையுடன் மிகுந்த தொடர்புள்ளது என்பது பிரசித்தமானது. மற்ற பாஷையிலுள்ள சொற்கள் ஸம்ஸ்கிருத நூல்களிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலும் இடம் பெறுவது சாத்தியமன்று. ஸம்ஸ்கிருதச்சொல் லொவ்வொன்றும் ஓர் "தாது"விலிருந்து அர்த்த விசேஷங்களைச் சொல்லும் விகுதியுடன் பிணைந்து உருவாவதால் மற்ற பாஷைகளுக்கு இந்த நியமம் இல்லாததால் ஸம்ஸ்கிருத பாஷையில் கலந்தாலும் மற்ற சொற்களைச் சுலபமாகவே கண்டு பிடித்தும் விடலாம். அவ்வித சொற்கள் கலந்திருப்பதாகவோ அவ்விதம் கலப்பதற்கு வடமொழி இலக்கணத்தில் அனுமதி இருப்பதாகவோ வடமொழி பண்டிதர்களால் இது வரையில் எந்தப் புஸ்தகத்திலும் எடுத்துக் காட்டப்படவில்லை, ஆனால் தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணத்திலும் பல வடமொழி சொற்கள் கலந்திருப்பதும் அவை வட சொற்களென்றே உரை ஆசிரியர்களாலும் படித்த பெரியோர்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வடமொழியிலுள்ள சொற்கள் தமிழ் இலக்கியத்தில் கலக்கக்கூடாதென்ற இலக்கணத் தடையுமில்லை திருக்குறள் முதல் பாட்டில் "அகரம்" "ஆதிபகவன்" "உலகு" என்ற சொற்கள் சந்தேகத்துக்கு இடமின்றி வடமொழியைச் சேர்ந்தவைகளே. சூத்ரம், இலக்கணம், இலக்கியம், என்பன போன்ற வட சொற்கள் பழைய தமிழ் நூல்களிலேயே காணப்படுகின்றன. நீர் என்று பொருள் கொடுக்கும் "நீரம்" என்ற வட சொல் உண்டான விவரத்தை பாணினி வியாகரணம் காட்டுகிறது. அதாவது—ணீஞ்-ப்ராபணே என்ற தாதுவுடன் உணாதிப்ரத்யயமான ரக் என்ற பகுதி இணைந்து நீரம் என்று முடிகின்றது. இவ்விதமே மீன் என்ற பொருளைக் கொடுக்கும் "மீனம்" என்ற வடசொல் "மீஞ்-ஹிம்ஸாயாம்" என்ற தாதுவுடன் கர்கா என்ற அர்த்தத்திலோ, கர்மணி அர்த்தத்திலோ நிபாதம் என்று பாணினி வியாகரணத்தால் புலப்படுகின்றது இவ்விதம் வடமொழிச்சொல் ஒவ்வொன்றும் பாணினி இலக்கணப்படி அமைவதால் இவைகளைப் பிறமொழி வார்த்தைகளெனக் கூசாமல் எவ்விதம் சொல்லக்கூடும். ஆகவே இவ்வார்த்தைகள் அனைத்தும் எல்லா ஜனங்களுக்கும் பொது பாஷையான ஸம்ஸ்கிருதத்தை யொட்டியவை [illegible]காலத்தில் போல முற்காலத்தில் ஸம்ஸ்கிருதத்தி[illegible]

சற்றும் வெறுப்பு இல்லாமலிருந்ததால் வடசொற்களைத் தேவையானவளவு இலக்கியங்களில் கலக்க நமது முன்னோர்கள் கூசவில்லை அது மாத்திரமல்ல. ஒரு தேசத்தின் ஜனங்களுக்கு இஹலோகத்திற்கும் பரலோகத்திற்கும் இன்றியமையாத எல்லா விஷயங்களுக்கும் எல்லா தேசங்களும் எல்லா பாஷைகளும் ஸம்ஸ்கிருதத்தையே நம்பியிருக்கின்றன. தமிழ் பாஷை இலக்கிய வளர்ச்சியில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாகவே மேன்மை பெற்றிருந்ததென்பது வாஸ்தவம் ஆனால் இம்மைக்குத் தேவையான கலைகளில் மயிரிழை கூட அபிவிருத்தியில்லாமல் வடகலைகளையே அது தன் சொந்தமாக்கிக் கொண்டது. ஜனங்களுடைய தேவைக்கு அத்யாவச்யமான வருஷங்கள் பெயர், மாதங்கள் பெயர், கணிதம், வானநூல், வைத்யம், முதலிய சகல கலைகளும் தமிழில் காணப்படவில்லை. அரசாக்ஷிக்கு முக்கியமான ஹிந்து சட்டங்கள் கூட அமையவில்லை. தேசத்தின் வியவஹாரத்துக்கு மிகத் தேவையான சகவருஷமே விடப்பட்டது. ராஜநீதியும் அவ்விதமே இவையனைத்துக்கும் தமிழ் மன்னர்களால் வட நூல்களே பின்பற்றப்பட்டன.

தமிழ் நாடு.

தமிழ் நாடு என்றும் தமிழ் பாஷை என்று சொல்லும்போது "தமிழ்" என்ற சொல்லைப்பற்றி சில தமிழ்ப் பெரியோர் ஆராய்ச்சி செய்து "தன் மொழி" என்ற சொல் திரிபு பெற்று தமிழ் என ஆயிற்று என முடிவு செய்துள்ளார்கள். இந்த முடிவை எல்லா பண்டிதர்களும் ஒப்புவார்களென நாம் நினைக்கவில்லை. உண்மையில் "த்ரமிள" என்ற வட சொல் தமிழ் என்றும் "த்ரமிட" என்ற வடசொல் த்ராவிட என்றும் சிதைவுற்று உபயோகிக்கப்படுகிறது என்பதுதான் பொருந்தும். இத்தமிழ் நாடு வெகு காலத்திற்கு முன்பு **தண்டகன்** என்ற ஓர் இக்ஷ்வாகு வம்சத்து அரசனால் ஆளப்பட்டு பிறகு கால தோஷத்தால் ஓர் பெரிய பாலைவனமாக ஆகி ஜனங்களற்று இருந்த சமயத்தில் அகஸ்த்தியர் இந்தப்பாலைவனத்தையடைந்து அதைச்செழிப்புறச் செய்தமையால் அது ஓர் பெரிய அரண்யமாகி தண்டகாரண்யம் எனப்பெயர் பெற்று பிறகு அகஸ்தியரை யொட்டி சில மகரிஷிகளும் குடியேறி தவம் செய்தனர். வால்மீகி ராமாயண காலத்தில் தமிழ் நாடு முழுதும் தண்டகாரண்யமாகவும், ரிஷிகளைத் தவிர வேறு ஜனங்களுமில்லாமலிருந்தது. பிறகு ராவணன் அரசாக்ஷியில் தென் நாட்டில் ஓர் ராக்ஷஸ சைன்யம் லங்கையின் பாதுகாப்பிற்காகவும் தண்டகாரண்யத்தில் வாசம் செய்த ராக்ஷஸர்களின் பாதுகாப்பிற்காகவும் ஸ்தாபிக்கப்பட்டது. கடைசியாக, இந்த சைன்யம் ஆரண்ய வாசம் செய்ய வந்த ஸ்ரீ ராமனால் நிர்மூலமாக, அழிக்கப்பட்டது. ஆகவே அக்காலத்தில் தென்

இந்தியாவில் நகரங்களோ ஜனங்களோ இருந்ததில்லை. ஆனால் வால்மீகி இராமாயணத்தில் இரண்டு இடங்களில் 'பாண்டிய' தேசத்தைப்பற்றிய பிரஸ்தாபம் காணப்படுகின்றது. அதாவது ஸுக்ரீவன் சீதையைத் தேட ஆஞ்சநேயர் முதலியவர்களை தெற்கு திக்கிற்கு அனுப்பும்போது அத்திக்கில் தேடவேண்டிய இடங்களைக் குறிப்பிடும்போது அத்திக்கில் "புரம் கவாடம் பாண்ட்யானாம் கதோ த்ரக்ஷ்யத வாநரா:" நீங்கள் பாண்டியர்களுடைய 'கவாட புரத்தை'க் காண்பீர்கள் என்பது ஒன்று. இரண்டாவது உத்தர ராமாயணத்தில் ராவணன் சீதாபஹாரம் செய்ததைக் கேள்வியுற்ற பரதன் லங்கையில் படையெடுக்க அரசர்கள் எல்லாரையும் ஒத்தாசைக்கு அழைத்த இடத்தில் பாண்டிய தேசத்தைக் குறித்திருப்பது இரண்டாவது ஆகும். இவ்வசனங்களை ஆதாரமாகக்கொண்டு பாண்டிய நாட்டையும் அதன் தலைநகரான "கவாட புரத்தை"யும் ராமாயண காலத்திற்கு முன்பே பிரசித்தி பெற்றவைகளென சிலர் நினைக்க ஹேதுவாகின்றது. இவ்விதம் நினைப்பது சற்றும் பொருந்தாது. ஏனெனில் (1) பாண்ட்ய என்ற சொல்லே தமிழ்ச்சொல் அல்ல (2 கவாட புரம் என்பதும் தமிழ்ச்சொல் அல்ல. இவைகள் வடமொழியைச் சேர்ந்தவை. (3) தென் இந்தியாவில் நிறுத்தப்பட்ட ராவண சைன்யம் மகரிஷிகளைச் சாப்பிட்டு வந்த நிலைமையில் அவ்விடத்தில் இருந்தும் நகரத்தையும் நகர ஜனங்களையும் அழிக்காமல் இராது (4) பாண்டிய மன்னனுக்கும் ராக்ஷஸர்களுக்கும் சண்டை நடந்ததாகச் சரித்திரம் கிடையாது, (5) ராவணன் திக்விஜயம் செய்தபோது வட தேச மன்னர்களுடன் சண்டையிட்டதாகத் தெரிகிறதேயன்றி தென் நாட்டில் போர் நடந்ததாகத் தெரியவில்லை. (6) ராமன் தென் நாட்டில் சஞ்சாரம் செய்த பொழுதும் தென் நாட்டிற்குச் சொந்தமான சமுத்திரத்தில் அதிலும் முத்து குளிக்கும் சமுத்திரத்தில் அணை கட்டும்போதும் தென் நாட்டு அரசனை சந்தித்ததாகவோ அல்லது தென் நாட்டு அரசரின் ஆதரவோ எதிர்ப்போ இருந்ததாகவோ தெரியவில்லை. தன் நாட்டில் பிரம்மாண்டமான அணை கட்டும் கோலாகலத்தைக் கூட அறியாமல் ஓர் அரசன் இருந்திருப்பான் என்று நினைக்க முடியாது. பெயர் பெற்ற இக்ஷ்வாகு அரசனும் கணக்கிலடங்காத வானர சைன்யமும் தென் நாட்டைச் சூழ்ந்துகொண்டு பாண்டியர்களுக்கு முக்கியமான சமுத்திரத்தில் அணை கட்டும்போது அதைத் தடுத்தோ அல்லது கூட இருந்து ஒத்தாசை செய்வதோதான் பொருத்தமானது. ஆக இக்காரணங்களால் ராமாயண காலத்தில் பாண்டிய நாடோ ஜனங்களோ இருந்திருக்க முடியாது. ஆனால் ராமாயணம் கட்டுக்கதை என்று தள்ளிவிடில் இந்த ஆக்ஷேபங்கள் அடிபட்டுப் போகுமென்று நினைப்பதும் சரியல்ல. ராமாயணத்தைத் தள்ளும்போது அதன் புராதனத் [illegible] கவாடபுரமும் கட்டுக்கதையாகிவிடும்,

ஆனால் ராமாயணத்திலுள்ள முன் சொன்ன இரண்டு வசனங்களுக்கும் நிர்வாகம் எவ்விதமென ஓர் கேள்வி பிறக்கின்றது. தமிழில் அபிமானமுள்ள ஒருவரால் இந்த வசனங்கள் ராமாயணத்தில் சேர்க்கப்பட்டு விட்டன என்று சிலர் கூறுகின்றனர் இதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் மகாபாரதத்தில் பாண்டிய மன்னனைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. மணலூர் என்ற இடத்தில் பாண்டிய ராஜதானி இருந்ததென்றும் அவ்விடத்தில் தீர்த்த யாத்திரையாக வந்த அர்ஜுனன் பாண்டிய மகளை மணந்தானென்றும் பிறகு யுத்த காலத்தில் பாண்டிய மன்னன் பாண்டவர்களுக்குத் துணையாக நின்று கடைசியாக துரோணாசார்யரால் யுத்த களத்தில் மடிந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது இந்தப் பாண்டிய மன்னன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்பது நிர்விவாதம், ஆனால் ராமாயணத்தில் சொல்லப்பட்ட பாண்டிய நாடு எது என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும். அது சேர்க்கப்பட்ட வசனம் என்று சுலபமாகத் தள்ளிவிட முடியாது நாம் ஏற்கனவே கூறியுள்ளபடி ராமாயண காலத்திற்கு முந்தியே எழுதப்பட்ட சுசுருத ஸம்ஹிதையில் சூத்ர ஸ்தானம் 13-வது அத்யாயத்தில் அட்டைகளைச் சொல்லுமிடத்து அடியில் கண்ட வசனம் காணப்படுகிறது. "யவந பாண்ட்ய ஸஹ்ய பௌதநாதீநி க்ஷேத்ராணி" இதன் பொருள். யவநதேசம், பாண்டிய தேசம், ஸஹ்யம், பௌதனம் இவை முதலிய க்ஷேத்ரங்களில் இருக்கும் அட்டைகள் உயர்ந்தவை என்பது பொருள் இங்கு டல்லண வியாக்யானத்தில் அடியில் காணுமாறு உரை எழுதப்பட்டுள்ளது. "யவன-துருஷ்கதேசம் பாண்ட்ய-தெற்கு திக்கில் உள்ள ஓர் தேசம். அதாவது,

कांबोजात् दक्षभागेतु इन्द्रप्रस्थात् च पश्चिमे । पाण्ड्यदेशो महेशानि महाशूर त्वकारक :॥ इति शक्ति संगमतन्त्रे सप्तम : पटल :

காம்போஜ தேசத்துக்கு வலது பக்கமாக இந்திரப்ரஸ்தத்திற்கு மேற்கில் இருப்பது பாண்டிய தேசம். இங்கு வசிக்கும் ஜனங்கள் மகா சூரர்கள் ஸஹ்யம்-நர்மதையின் கரையிலுள்ள ஓர் பர்வதம். பௌதனம்-மதுரைப்ரதேசம் என்று காணப்படுகிறது. இந்திரப்பிரஸ்தம் தற்கால டெல்லியென்பர். ஆகவே இந்தப் பாண்டிய தேசம்தான் ராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது. வடமதுரை, தென் மதுரை, என்று இருப்பது போல தென் பாண்டிய நாடு, வட பாண்டிய நாடு என இரண்டு பாண்டிய நாடுகள் நமது இந்தியாவில் உள்ளன ராமாயணத்தில் இருப்பது வட பாண்டிய நாடு. ஆகவே தென் இந்தியா ராமாயண காலத்தில் தண்டகாரண்யமாகவிருந்து ராக்ஷதர்கள் மடிந்த பிறகு முதலில் தவம் செய்யும் முனிவர்களும் பிறகு காலக்கிரமத்தில் [illegible] குடியேறி [illegible] அமைத்தனர்.

ஜனங்கள் பெரும்பாலும் வடநாட்டினரே. தென் நாட்டிற்கு இவர்கள் வந்த பிறகு அகஸ்தியருடைய கிருபையால் வெகு காலத்திற்கு முன்பே அதாவது சுக்ரீவன் முதலிய அவதார வானரர்கள் விட்டுப்போன பாஷையை சீர்திருத்தி பேசும் பாஷையாக அமைத்துக்கொண்டு த்ரமிட தேசத்தில் வசிப்பதால் தங்களைத் திராவிடர்களென்றும், த்ரமிள பாஷையைத் தமிழ் பாஷையென்றும், த்ரமிள தேசத்தில் வசிப்பதால் தங்களைத் தமிழர்களென்றும் அழைத்துக்கொண்டனர். ஆகவே தமிழ் தேசத்தில் வசிப்பவர் அனைவரும் வட நாட்டினரே.

இனி மூன்றாவது விஷயத்தைக் கவனிப்போம். உலகத்திலுள்ள எல்லா பாஷைகளுமே ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்த பாஷைகளாதலால் எல்லா பாஷைகளிலும் கலந்திருக்கும் ஸம்ஸ்கிருதச் சொற்களை எல்லா ஜனங்களுமே பிரதிதினம் பேசிக்கொண்டிருக்கும்போது அதை செத்த பாஷையெனப் பேசுவது பேதமை, ஒரு பாஷை யாராலும் பேசப்படாவிட்டால் அதை செத்த பாஷையென நினைக்கலாம். தேவலோகங்கள் முதல் எல்லா உலகங்களிலும் வியாபித்தும் எல்லா பாஷைகளிலும் கலந்தும் சில வகுப்பினரால் சகல காரியங்களிலும் பேசும் பாஷையாக உபயோகிக்கப்பட்டும் உலகம் முழுவதும் படிக்கப்பட்டும் வரும் பாஷையை நித்ய பாஷையாகச் சொல்லுவதுதான் பொருந்தும்.

ஆகவே இந்த வியாசத்தால் அக்னிவேசரும் சுசுருதரும் பாரதத்தில் வர்ணிக்கப்பட்டவர்கள். ஆகவே இவர்கள் காலத்தை மகாபாரதம் முதலிய நூல்களால் அறியலாமேயன்றி சைனயாத்ரிகருடைய குறிப்பாலோ அல்லது அது போன்றவைகளை ஆதாரமாகப் பின்பற்றிய ஸ்ரீமான் கணநாத் சேன், டாக்டர் P. C. ரே முதலியவர்களுடைய ஆபாஸ வாதங்களாலோ அறிவது அசாத்தியம். மகாபாரதம் அனுசாஸந பர்வத்தில் சுசுருதருடைய குறிப்பு இருப்பதை ஏற்கனவே சொல்லியுள்ளோம். திரௌபதீ ஸ்வயம்வரத்திற்குப் பாண்டவர்கள் போகும்போது நடுவில் ஓர் கந்தர்வன் அவர்களை வழி மறிக்க அச்சமயம் கோபம் கொண்ட அர்ஜுனன் ஆக்னேயாஸ்திரத்தால் அக்கந்தர்வனை ஜயிக்க அக்கந்தர்வன் நட்பு கொண்டு அர்ஜுனனிடம் ஆக்னேயாஸ்திரத்தைப் பெற விரும்ப அச்சமயம் அர்ஜுனன் அவனுக்கு அந்த அஸ்திரத்தையும் கொடுத்து அதன் வரலாற்றைச் சொல்லும்போது அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது. இந்த அஸ்திரத்தை பாரத்வாஜர் அக்நிவேசருக்கு அளித்தார். அவர் துரோணாசார்யருக்குக் கொடுத்தார். துரோணாசார்யர் எனக்குக் கொடுத்தார். நான் உனக்கு கொடுத்தேன். சுபமஸ்து.

பண்டிட் நாராயணய்யங்கார், மதுரை.

பத்திராதிபர் குறிப்பு.

சென்னை ஸர்க்கார் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் ஆயுர்வேதம், ஸித்தம், யூனானி ஆகிய மூன்றுவித இந்திய வைத்திய முறைகளில் ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு தனி ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறது. இதில் ஆயுர்வேதத்தில் செய்யவேண்டிய ஆராய்ச்சிக் கிரமங்களைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்குமாறு சில ஆயுர்வேத பண்டிதர்களுக்கு சில கேள்விகள் விடுத்துள்ளார்கள்.

திருச்சி, ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகளால் மேற்படி கேள்விகளுக்குப் பதில் ஸம்ஸ்கிருத பாஷையிலும் ஆங்கில பாஷையிலும் அனுப்பப்பட்டுள்ளதின் தமிழ்மொழிபெயர்ப்பு இது. கேள்விகள் மட்டும் ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து வந்தபடியே ஆங்கிலத்தில் இங்கும் எழுதப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பினால் ஏற்படக்கூடிய சிறு மாறுதலைத் தவிர்க்க இவ்விதம் செய்யப்பட்டது

ஸ்ரீ நடராஜ சாஸ்திரிகள் எழுதியிருக்கும் பதிலை வாசகர்கள் கவனித்துப் படித்துத் தங்களுடைய அபிப்பிராயங்களை சந்திரிகை வாயிலாகத் தெரிவிக்கக் கோரப்படுகிறது.

சுருக்கத்தில் ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி, பரிசுத்தமான முறையில் செய்ய வேண்டும். தவறான முறையில் ஆராய்ச்சி செய்வதைப் பார்க்கிலும் செய்யாமலிருப்பது மேல் ஆதலால் ஆயுர்வேதத்தை உண்மையில் வளர்க்கும் ஆராய்ச்சி முறையை பண்டிதர்கள் யோஜித்துத் தீர்மானிக்க வேண்டியது முதற்கடமையாகும்.

பத்திராதிபர்.

கேள்விகளும், ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்திரி அவர்களால் அளிக்கப்பட்ட பதிலும்.

கேழ்வி 1.

Please state the object of research and the general principles on which Research in Ayurveda is to be carried out.

பதில் 1.

குறிப்பு :—ஆயுர்வேதம் என்ற சப்தத்திற்கு உட்பொருளைக் கொண்டு அர்த்தம் எடுத்துக்கொண்டால், உலகின்கண் காணும் அகில வித வைத்திய சாஸ்திரங்களுக்கும் ஆயுர்வேதம் என்ற பெயர் முற்றிலும் தகுந்ததாகவே ஆகிறது. ஆயினும், இங்கு நமது பாரத நாட்டில் ஸ்ரீ சரக ஸுச்ருத வாக்பட நாகார்ஜுனர் முதலியவர்களால் விஸ்தாரமாய் உபதேசிக்கப்பட்டுள்ள வைத்திய சாஸ்திர முறை மட்டுமே ஆயுர்வேதம் என்ற சப்தத்தினால் கூறப்படுகிறது என்ற விஷயம் முற்றிலும் நினைவு வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆயுர்வேதத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி முறையின் பிரயோஜனங்களுடையவும், லக்ஷியங்களுடையவும் சுருக்கமாவது :—

1. இப்பொழுது உலகில் கிடைக்கும் ஸகல ஆயுர்வேத நூல்கள், அவைகளின் மூலாதார தர்சனங்கள் அங்கோபாங்கங்கள் எல்லாவற்றினுடையவும் பொருளை உண்மையாக முதலில் அறிந்து கொள்ளுதல்.

2 மக்களுடைய ஸுகாதாரத்தைக் காப்பாற்றவும், நோய்களை அகற்றவும் ஆயுர்வேதம் பூர்ணமான ஆற்றல் பெற்றுள்ளதா? குறைவிருக்கிறதா? ஆயுர்வேத மூலதத்வ ஸித்தாந்தம் சரியானதா? தவறானதா? என்று பரீக்ஷை செய்தல்.

3. குறைவுகளிருப்பின், ஆயுர்வேத ஸித்தாந்தங்களின்படி அக்குறைவுகளைப் பூர்த்தி செய்யும் முறைகளை நிச்சயித்தல்.

4. இந்தக் காலத்திற்குப் பிரயோஜனமற்ற பகுதிகளை நீக்கி, ஆயுர்வேதத்தில் இல்லாமல் அவசியமாயிருக்கும் விஷயங்களை ஆயுர்வேதத்தை சொந்த ரீதியில் அபிவிருத்தியாக்கக்கூடிய முறையிலேயே சேர்த்தல்.

5 நூதன விஞ்ஞானிகளிடையே ஆயுர்வேதம் பரம சுத்தமான விஞ்ஞான ஆதாரத்தில் அமைந்துள்ளதென்பதை நிரூபணம் செய்தல் ஆனவைகளாகும். மேற்கூறிய லக்ஷ்யங்களையும் பிரயோஜனங்களையும் அளிக்க வல்ல ஆராய்ச்சி முறை நிறுவப்பட வேண்டும். இந்த முறைதான் உண்மையில் ஆயுர்வேதத்தை வளர்க்கக் கூடியதாகும்.

ஆயுர்வேதத்திலிருந்து உபயோகமுள்ள அம்சங்களைச் சேகரித்து, அவைகளை ஆங்கில வைத்திய முறையுடன் ஒன்று சேர்க்கும் நோக்கத்துடன் செய்யப்படும் ஆயுர்வேத ஆராய்ச்சியோ, அல்லது மேல்நாட்டு வைத்திய முறைகள், கீழ்நாட்டு வைத்திய முறைகள் எல்லாவற்றிலுமிருந்து ஸாரமான பாகங்களை ஒருங்கு சேர்த்து ஒரு நூதனமான வைத்திய சாஸ்திர முறையை. உலகில் ஒரே வைத்திய முறையை நிறுவிவிட வேண்டும் என்ற மனோரதத்துடன் செய்யப்படும் ஆயுர்வேத ஆராய்ச்சியோ, இந்த இரண்டு முறையும் ஆயுர்வேதத்திலிருந்து விஷயங்களை அபஹரிக்கும் தன்மை பெற்றதாகும். ஆகலால் இதில் எந்த ஒரு வழியும் ஆயுர்வேத வளர்ச்சிக்கு உதவியளிக்க முடியாது.

ஒரு சங்கை உண்டாகலாம் அதாவது :— 'ஆங்கில வைத்திய முறை உலகம் முற்றிலும் கையாளப்படுகிறது.' விஞ்ஞான மூலாதாரதிலுண்டானது. எல்லா அங்கங்களிலும் ஸம்பூர்ணமானது. இந்த முறை (Allopathic) மக்களுடைய ஸுகாதாரத்தைக் காப்பாற்றவும். பிணிகளைப் போக்கவும் முற்றிலும் ஆற்றல் பெற்று விளங்குகின்றது. ஆயுர்வேத மிவ்வாறு இல்லை. பண்டைய காலத்தில் ஆயுர்வேதம் உதவி செய்ய வல்லதாயிருந்திருப்பினும் இன்று அதன் வியவகாரம் மறைந்து விட்டது. ஆதலால் ஆயுர்வேதத்தில் அதன் சொந்த முறையில் வளருபடி ஆராய்ச்சி செய்வது மிக்க கடினமாகும் சிரமம். பயனளிக்காது, என்று இந்தச் சந்தேகத்திற்கு இடமில்லை. எவ்விதமெனில் ,— ஆயுர்வேத சாத்திரம் வெகு காலமாக ஆராய்ச்சி இன்மையால் இளைப்புற்றிருப்பினும், அரசாங்க ஆதரவின்மையால் ஒளி யிழந்திருப்பினும், அது இன்றைக்கும் உயிர் வாழ்ந்து வருவதுமட்டுமின்றி பாரத நாடு பூராவும் மக்களின் பெரும்பாலோருக்கு பிணியகற்றிக்கொண்டே யிருப்பது கண்கூடாகும். ஆதலால் ஆயுர்வேதம் ஆராய்ச்சியால் வளர்க்கப்பட்டதாக ஆனால் எல்லா அங்கங்களிலும் பூர்ணமாய் முன்பு போல திரும்பவும் நன்கு சோபிக்கும் என்பதில் ஐயமில்லை.

Q. 1. a.

The order in which the research problems are to be taken may also be stated.

பதில் 1. A.

மேல் நாட்டு வைத்திய முறையில் மேல் நாட்டுப் பண்டிதர்களால் எவ்விதமான வழியில் ஆராய்ச்சி செய்யப்படுகின்றதோ அதே வழியை ஆயுர்வேத ஆராய்ச்சியில் அப்படியே முற்றிலும் பின்பற்றுவது நல்ல பயனளிக்காது. ஆராய்ச்சி செய்யவேண்டிய கிளைகள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் தொடங்கி நடத்துவதும் காரியங்களில் கலக்கத்தை யுண்டுபண்ணும். ஆதலால் ஆயுர்வேதத்தின் தற்கால நிலையை ஸ்வரூபத்தை நன்கு பார்த்து படிப்படியாய் மேலேறிக்கொண்டு கார்யங்களைச் செய்யவேண்டும். தயாரித்த மருந்துகள் ஒரே விதமான ஸ்வரூபத்தில் இருக்கின்றனவா என்று கண்டு பிடிக்க உபாயம் தேடுவது போன்ற கார்யங்களில் முதலில் ஈடுபட வேண்டியதில்லை. முதல் கேழ்வியின் உத்தரத்தில் குறிக்கப்பட்டுள்ள ஐந்து வித லக்ஷ்யங்களில் ஒன்றன்பின்னொன்றாக எடுத்து கிரமமாய் ஆராய்வது உத்தமம்.

ஆராய்ச்சி நிலயங்களை மூன்று முக்கிய கார்யங்களில் பிரிக்க வேண்டும். அதாவது நூல் ஆராய்ச்சி, மூல தர்சன ஆராய்ச்சி, சிகித்ஸை ஆராய்ச்சியென்ற பிரிவுகளாகும். நூல் ஆராய்ச்சியில் எல்லாவற்றிலும் செய்யவேண்டிய முதற் காரியமாவது நமது நாட்டிலும் வெளி நாட்டிலும் கிடைக்கும் ஆயுர்வேத நூல்கள் அனைவற்றையும் ஒன்று சேர்த்தல், விஷய வாரியாக அவைகளனைவற்றையும் தொகுத்தல், கிலேசமான பரிபாஷையும், சொல்லிய பாகத்தைத் திருப்பிச் சொல்லுவதும் ஆன இருவிதக் குறைகளை யகற்றி, புதிய புஸ்தகங்கள் விஷய வாரியாக எழுதப்படவேண்டும். பிறகு ஆயுர்வேதத்தில் கூறப்படாததாயும் ஆனால் மிகவும் சிகித்ஸைக்கு உபயோகமளிக்க வல்லதுமான அம்சங்கள் ஏதாகிலும் யூனானி வைத்தியத்திலும் ஸித்த வைத்தியத்திலு மிருப்பின் அவைகளை ஆயுர்வேதத்தின் அந்த அந்த சாகைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆயுர்வேதம் ஸித்தம் யூனானி ஆகிய மூவ்வித வைத்திய முறைகளும் அநேகமாய் ஒரே விதக்கொள்கைகளில் அமைந்தவையே. ஆதலால் இவைகளை ஒன்று சேர்த்து எழுதுதல் மிக எளிதே. ஆயுர்வேதத்தில் இல்லாமல் ஆலோபதிக் முதலிய வைத்திய நூலிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டியவைகள் இருப்பின் அப்படிப்பட்ட அம்சங்களை எல்லாவற்றையும் ஆயுர்வேதத்தின் மூல தர்சனங்களால் பரிசோதனை செய்து ஒரு முகப்படுத்தின பின்பே ஆயுர்வேதத்துடன் சேர்க்கவேண்டும். ஏனெனில் ஆயுர்வேதமும் மேல் நாட்டு நவீன வைத்தியமும் அநேக விதத்தில் வேற்றுமைக் கொள்கையுடையதாயிருக்கிறது.

நியாயம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள் அதின் பிர[illegible]மையங்களுக்குத் தகுந்தவாறு, பிரமாணங்களையும் பிரக்கிரியை

ளையும் விஸ்தாரமாய் சுதந்திரக் கொள்கையுடன் செய்துகொண் ருக்கின்றன. இதே போல ஆயுர்வேதமும் தனியாகவே தன் ஸ்திரக் கொள்கையை வகுத்து சிலப்பிரக்கிரியைகளை செய்து காண்டிருக்கிறது. இந்தப் பகுதியே ஆயுர்வேத மூலதர்சனம் னப்படும். ஆராய்ச்சியில் ஆயுர்வேத மூலதர்சனப் பிரிவு தனி க ஏற்படுத்தப்பட வேண்டும். இதில் ஆயுர்வேதமென்ன ரத நாட்டின் பிராசீனமான ஷட் தர்சனங்களென்ன புதிய மல் நாட்டு விஞ்ஞானங்களாகிய Physics Chemistry, Biology, Botony, Engineering முதலிய ஸைன்ஸுகளென்ன. இவைகளில் தனித்தனியே தேர்ச்சி பெற்ற பண்டிதர்கள் ஒன்று சேர்ந்து செய்யவேண்டிய கார்யங்கள் பல உள.

தலைமை ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து ஒரு மாதாந்திரப் த்திரிகை நடத்தப்படவேண்டியது அவசியம். இதன் மூலம் ராய்ச்சிக் கழகத்தில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள், ஆலோ க்கப்படவேண்டிய விஷயங்கள் எல்லாம் பிரகாசிக்கப்பட வண்டும். நெடுந்தூரத்தில் வசிக்கும் பண்டிதர்கள் தங்கள் ல்லத்திலிருந்துகொண்டே இப்பத்திரிகை வாயிலாக ஆராய்ச்சிக் ழகத்திற்கு பேருதவி செய்ய இயலும். ஆயுர்வேத விஷயத்தை ற்றி விளக்க அதிக ஸௌகர்யமான மொழி ஸம்ஸ்கிருதமே. கில பாரத நாட்டிலும் ஆயுர்வேத உலகில் வியாபகமாயிருப் தும் இதுவரை ஸம்ஸ்கிருதமே. ஆதலால் இந்த மாஸப் த்திரிகை பிரதானமாய் ஸம்ஸ்கிருதத்திலிருப்பதே உபகாரமா ருக்கும்.

Q. 2

Please state which of the Institutions namely eaching Institutions, Hospitals, Dispensaries, onsulting Rooms of individual practitioners etc., re suited for such Research?

தில் 2.

இந்த சென்னைப் பிராந்தியத்தில் இன்று இருக்கிற யுர்வேத வித்யாலயங்கள், ஆரோக்கிய சாலைகள், ஔஷதாலயங் ள், சுதந்திரத் தொழில் புரியும் வைத்தியசாலைகள் எதுவுமே யுர்வேதத்தின் ஏதாவது ஓரங்கத்தின் ஆராய்ச்சியை ஆரம்பித்து டத்தப்போதுமான ஸாதனங்கள் அமைந்துள்ளதாக இல்லை ன்பது முற்றிலுமுண்மை. ஆயினும் கீழ் குறிக்கப்பட்டுள்ள டங்களில் அதற்கேற்ற ஆராய்ச்சிக்கு அவசியமான ஸாதனங்களை ரைவில் நிறைவேற்ற ஸௌகர்யப்படுத்த முடியும்.

1. Government College of Indian Medicine, Madras.
2. Venkataramana Ayurvedic College and Hospital, Mylapore.
3. Venkateswara Ayurvedic College, Vijayawada
4. Government Ayurvedic College, Mysore.
5. Government Ayurvedic College, Trivandrum.
6. Arya Vaidya Patasala, Kottakkal.
7. Arya Vaidyasala, Kottakkal.
8. Jaya Chamarajendra Institute of Indian Medicine, Bangalore.
9. Keraliya Ayurveda Samajam, Shoranur.
10. The Madras Provincial Indian Medical Practitioners' Co-operative Pharmacy and Stores Ltd., Adayar.
11. Ayurvedacharya V. B. Nataraja Sastri's Atreya Ayurveda Sala, Tiruchirapalli.

ஒரே இடத்தில் எல்லாவித அங்கங்களிலும் ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்வதைக்காட்டிலும், காரியத்திற்கேற்றவாறு ஸாதனங்கள் பொருந்தியுள்ள தனித்தனியிடங்களில் பிரத்யேக அங்க ஆராய்ச்சி நடத்த ஏற்பாடு செய்வதானது பொருள் செலவு விஷயத்தில் சிக்கனமிருக்கலாம். இதற்காக மேலே குறிக்கப்பட்ட பல்வேறு ஸ்தானங்கள் ஆலோசிக்கத்தக்கவை. ஸௌகர்யத்திற்காகப் பல்வேறு இடங்களில் ஆராய்ச்சிக்கழகங்களை ஏற்படுத்தினாலும் எல்லாவற்றுக்கும் கட்டளை இடவும், காப்பாற்றவும் ஸர்வாதிகாரம் பெற்ற தலைமைக் காரியாலயம் அடங்கிய ஆராய்ச்சிக்கழகம் சென்னை நகரத்தில் நிறுவப்படவேண்டும்.

Q. 3.

What is the plan for Research, to clarify the Tridosha and Panchabhuta Theories?

பதில் 3.

இந்தக் கேள்வியின் பொருள் தெளிவாய் இல்லை. எதற்காக இக்கேள்வி என்று முதலில் தெளியப்படுத்தியிருக்கலாம். ஒருவன் ஆயுர்வேதத்தை முறையுடன் படிப்பானாகில் அவனுக்கு வைத்தியம் புரிவதற்கு அவச்யமான ஞானம் திரிதோஷத்திலும் பஞ்சபூதத்திலும் பூர்ணமாய் உண்டாகும். இவ்வைத்தியனுக்கே

மேலும் நியாயம், ஸாங்கியம் முதலிய தர்சனங்களில் விசேஷம் பரிசீலனம் செய்வானேயாகில் திரிதோஷ பஞ்சபூத ஸம்பந்தமான வாதத்திற்கும் விசேஷ ஆராய்ச்சிக்கும் மிகுந்த தேர்ச்சியடைவிக்கும். மிகவும் தொன்றுதொட்ட காலம் முதல் ஸம்பிரதாயமாய் த்ரிதோஷ பஞ்சபூதவாதத்தில் ஐயமற்றக்கொள்கை. இன்றுவரை வந்துகொண்டிருக்கும்பொழுது இப்பொழுது புதிதாய் த்ரிதோஷ பஞ்சபூதவர்தத்தில் என்ன தெளிவுபடுத்தப் படவேண்டும்?

நவீன விஞ்ஞான ரீதியில் திரிதோஷ பஞ்ச் பூதங்கள் அறியப் படவேண்டும் என்றெண்ணமாயின் இக்காரியப் பொறுப்பு நவீன விஞ்ஞானிகளுடையதாகுமே தவிர ஆயுர்வேத ஸம்பந்தப்பட்டதாகாது. ஒருக்கால் திரிதோஷ பஞ்சபூத வாதம் விஞ்ஞானப்படியே முற்றிலுமுள்ளது என்ற ஸித்தாந்தத்தை நவீன விஞ்ஞானிகளிடையே ஆயுர்வேத பண்டிதர்கள் நிரூபிக்கவேண்டும் என்ற எண்ணமாகில் செய்யவேண்டிய முறையாவது:—ஆயுர்வேதத்திலும் நியாயம் முதலிய தர்சனங்களிலும் பாண்டித்யம் பெற்ற வைத்தியர்களுக்கு முதலில் நவீன விஞ்ஞானம் கற்பிக்கப்படவேண்டும். பிறகு இரண்டு வித்தைகளிலும் உள்ள கொள்கைகள் ஸமந்வயம் செய்யப்படவேண்டும். பிறகு நவீன பரிபாஷையில் பிறருக்கும் போதம் ஏற்படும்படி இவர்களால் விளக்கப்படவேண்டியது.

இந்த முறையானது ஆயுர்வேத வளர்ச்சிக்கு உண்மையில் மிகவும் உபகாரமாயிருக்கும். ஏனெனில், நவீனமான விஞ்ஞானங்களிலிருந்து உபயோகமான பாகங்களை ஆயுர்வேதத்தில் சொந்தமாய் செய்துகொள்ளத்தக்க வழியை இது செம்மை செய்யும். முன்பு கூறியபடி ஆயுர்வேத வித்வான்களை ஆராய்ச்சிக்கு ஈடுபடுத்தாமல், நவீன விஞ்ஞானங்களில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களைக்கொண்டு அந்த சாஸ்திரப்படி திரிதோஷ பஞ்சபூத வாதத்தை முதலில் உள்ளபடி அறிவதற்கோ மேல்நாட்டுப் புதிய விஞ்ஞானங்களுடன் ஸமந்வயம் செய்வதற்கோ செய்யப்படும் ஒரு முயற்சியானது ஆலோபதிக் முதலிய நவீன விஞ்ஞானங்களுக்கு உதவியளிக்குமோ அளிக்காதோ அவ்விஷயத்தில் நமக்குச் சிந்தனையில்லை. ஆயுர்வேத வளர்ச்சிக்கு அவ்வழி அநுகூலமாக இராதென்பது திண்ணம்.

Q. 4.

Do you think that a knowledge in the Modern Basic Sciences as Physics, Chemistry, Biology and Medical Subjects (Preclinical and Clinical) is necessary for the student of Ayurveda, if so what

அதவ்வளவையும், ஆயுர்வேத ஸித்தாந்தங்களுடன் ஸமந்வயமும் ஒன்று சேர்த்தலும், பெரிய வித்வான்களான ஆராய்ச்சியாளர்களால் முதலில் செய்வித்து, பிறகே மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்த மார்க்கந்தான் உண்மையில் ஆயுர்வேதத்தை வளர்க்கும். ஆயுர்வேதத்தை மாத்திரம் பயின்று மாணவர்கள் பூர்ண ஸாமர்த்தியம் வாய்ந்த உந்நத வைத்திய மணிகளாக விளங்குவார்கள்

இரு சாஸ்திரங்களையும் ஸமந்வயம் செய்வதில் ஆசார்யர்கள் ஒரு முயற்சியும் செய்யாமல், பெரும்பாலும் வேற்றுமைக் கொள்கைகளுடையதான ஆயுர்வேதத்தையும் ஆலோபதிக் வைத்தியத்தையும் 4-5 வருஷப் படிப்புக் காலத்திற்குள்ளாக மாணுக்கருக்கு முற்றிலும் கற்பித்தல் முதலில் நடத்தமுடியாத காரியம். ஆசார்யர்களையே கலக்கிவிடும். மாணுக்கர்களைக் கேட்பானேன்; கவர்ன்மெண்டு இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் இவ்விதம் கலந்த பாடத்திட்டத்தை அநுஷ்டிப்பதின் பயன் எப்படி? மாணவர்கள் இறுதியில் இரண்டு வைத்திய முறையிலும் ஸ்வல்பமாயும் ஸ்தூலமாயும் இருக்கும் ஞானம் அடைந்தவர்களாகி, முடிவில் ஆலோபதிக் மருந்துகளை மட்டும் தொழிலில் உபயோகிப்பவர்களாக இருக்கின்றனர். ஆகவே கலந்த பாடத் திட்டத்தினுல் ஆயுர்வேதத்திற்குப் பிரயோஜனமேற்படாததினுலும், அழிவு ஏற்படுவதாகத் தெரிவதாலும், ஸாதாரண வித்யார்த்தி தசையில் இந்தக்கலவைப்பாடம் கைவிடப்படவேண்டும்.

ஆனுலொரு கக்ஷி சொல்லலாம்:— இன்று ஆலோபதிக் வைத்திய முறை உலகம் பூராவும் பரவியிருப்பதால் வைத்திய உலகில் எளிதில் பழகும் ஞானமடைவதற்காக ஆலோபதிக் வைத்திய முறையின் ஸ்வரூப ஞானம் ஆயுர்வேதப்படி வைத்தியம் செய்பவனுக்கும் இன்றியமையாததாகும்.

அப்படி அவசியம் தோன்றினுல் மையன்களுக்கு ஆயுர்வேத பயிற்சியின் முடிவுகாலத்தில் ஆலோபதிக் ஹோம்யோபதிக் முதலிய நவீன வைத்திய முறைகளில் ஸாதாரணமாய் லோக வியவஹாரத்திற்குத் தேவையான அறிவைப்புகட்டும்படிக்கு பாடக்கிரமம் வகுத்துப் படிப்பித்தலே நல்லதாகும்.

Q. 5. Please state how the Rasa, Guna, Veerya, Vipaka, Prabhava theories could be availed of for testing the drugs; How could this theory be applied with regard to compound preparations?

பதில் 5.

திரவியத்தில் ரஸம்—குணம்-வீர்யம்—விபாகம்-பிரபாவம் இவைகள்தான் பரீக்ஷிக்கப்பட வேண்டியதாயிருக்கும்பொழுது அவைகளை பரீக்ஷைக்குக் கருவிகளாகக்கருதுவதற்கே இடமில்லை. ஒவ்வொரு திரவியத்திலும் ரஸாதிகளை உள்ளே சாப்பிட்டுப் பார்த்துத்தான் நிச்சயம் செய்யமுடியும். பூர்வாசார்ய புருஷர்களால் கூறப்பட்டுள்ள திரவ்யங்களில் அவர்கள் சொல்லியிருக்கும் குணபாடங்கள் சரியாயிருக்கின்றனவா என்று பார்க்கிறதிற்கும், பூர்வாசார்யர்களால் சொல்லப்படாத திரவியங்களிலும்கூட குணபாடம் அறிவதற்கும் செய்யவேண்டிய பரீக்ஷையில் பிரபாவம் தவிர ரஸகுண வீர்ய விபாகங்களுக்கு அநேகமாய் ஸாஹசர்யம் இருப்பதால் இந்தப்பகுதி மிகவும் அநுகூலமாயிருக்கும். முடிவில் திரவ்யப்பிரபாவம் திரவியத்தின் அதிகமான உள்பிரயோகப் பரீக்ஷையினுல்தான் நிச்சயிக்கப்படவேண்டும்.

அநேக திரவ்யங்கள் சேர்த்து செய்யப்பட்ட ஔஷதங்களுக்கு சேர்க்கையினுல் ஒரு சக்தி விசேஷம் அவைகளில் உண்டாவதால். அவைகளின் குணத்தைப் பரீக்ஷை செய்யவோ, சுத்திமானத்தை நிர்ணயிக்கவோ (Standardise) பிராசீன புஸ்தகங்களிலிருக்கும் திரவ்யகுண பாடம் முற்றிலும் போதுமானதல்ல. நவீன விஞ்ஞானத்தில் இவ்விஷயத்தில் உபகாரமான முறையிருந்தால் அதை ஆயுர்வேதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டியது ஆனுல் அம்முறை முதலில் ஆயுர்வேதபோஷகமான மூலதர்சனங்களில் ஸமந்வயம் செய்யத்தக்கது. இக்காரியம் ஆயுர்வேத மூலதர்சன ஆராய்ச்சி விபாகத்தில் செய்யப்பட வேண்டும்.

Q. 6. How should the Research be planned in Rasa-Sastra; how to assess the value of the Sodhana and Marana of Metals after such treatments.

பதில் 6

ரஸ சாஸ்திரத்தின் ஆராய்ச்சி முறையும் மற்ற அங்கங்களில் செய்யவேண்டிய முறைபோலவே ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பிரதேச பாஷைகளில் இப்பொழுது கிடைக்கக்கூடிய எல்லா ரஸ சாஸ்திர கிரந்தங்களிலிருந்தும் பாடங்களை விஷயவாரியாகப் பிரிவினைசெய்து புநருக்தி தோஷமில்லாமல் புதிதாகக் கிரந்தங்கள் தொகுத்து எழுதப்படவேண்டியது முதற்காரியம். அடுத்தபடியாக, தாதுக்கள் உபதாதுக்கள்; ரஸங்கள், உபரஸங்கள், மஹாரஸங்கள் ஸ்வாங்கத்தில் தானுக உற்பத்தியானவைகள். வைப்புச் சரக்குகள், ஸம்ஸ்காரங்கள் செய்ய உபயோகிக்கும் திரவ்யங்கள்,

மூலிகைகள் இவைகளெல்லாவற்றினும் ஸ்வரூப நிர்த்தாரணம் செய்யப்பட வேண்டும். புராதன நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படிக்கே தாதுக்கள் எல்லாவற்றுக்கும் சோதனம், மாரணம் முதலிய ஸம்ஸ்காரங்கள் செய்து, பிரதி திரவ்யத்திற்கும் பல திரவ்யங்கள் சேர்த்து முடித்த ஔஷதங்கட்கும் குணங்களை மனுஷ்ய சரீரத்தில் விசேஷமாய் பிரயோகம் செய்து பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

புராதன ரஸ சாஸ்திரத்தைப் பிரதி ஸம்ஸ்காரம் செய்யும் கார்யத்தில் நூதன கெமிஸ்டிரி (Chemistry) விஞ்ஞானம், சரியான வழிப்படுத்தி எடுத்துக்கொள்ளப்படின் மிகவும் உபகாரமாயிருக்கும். ஆதலால் நூதன கெமிஸ்டிரியை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் நூதன கெமிஸ்டிரி விஞானம் எவ்வித சீர்திருத்தத்தின் மேல் எடுத்துக்கொள்ளப்பட்டால் ஆயுர்வேத ரஸ சாஸ்திரத்திற்கு உண்மையான வழியில் வளர்ச்சி கொடுக்க உதவக்கூடும் என்று, ஆயுர்வேத மூல தர்சனத்தின் ஆராய்ச்சி பண்டிதர்கள் முதலில் தீர்மானம் செய்து, சீர்திருத்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

Q. 7. How to determine the value of Ghrithams Thylams, Lehyams and Rasa preparations as seen tn the Ayurvedic Pharmacopoea?

பதில் 7.

ஆயுர்வேதமானது தயாரிக்கப்பட்ட மருந்துகளுடையகுணத்தைக் கண்டுபிடித்து நிச்சயம் செய்வதற்கு ஒரே உபாயந்தான் சொல்லுகிறது. "सम्यक् प्रयोगं सर्वेषां सिद्धिराख्याति कर्मणाम्" அதாவது—ஔஷதமோ அதன் பிரயோகமோ நல்ல பரிசுத்தமாய் உள்ளது என்பதைத் தெரிவிப்பது கார்ய ஸித்திதான். அது உள் பிரயோகத்தினால்தான் நிச்சயிக்கமுடியும். இவ்வாறு உள் பிரயோகமின்றியே ஔஷதங்களுடைய சுத்தி அசுத்தி முடிவைக் கண்டுபிடிக்க நவீன விஞ்ஞானத்தினால் வழி கண்டுபிடிக்கப் பட்டிருப்பின் அதையும் நாம் எடுத்துக்கொள்ளப் பிரியமே. மூலதர்சனத்தில் ஸமந்வயம் செய்து சேர்த்துக்கொள்ளுவோம்.

Q 8. What is the scheme to be adopted in editing Text books in Ayurveda a fresh? Have they to be written in Sanskrit, Hindi, English or regional languages? What is the basis on which the subjects for study in Ayurveda are to be classified from the stand-point of a student and a Practitioner?

பதில் 8.

ஆயுர்வேதத்தில் புதிய பாட புஸ்தகங்களை மாணவர்களை உத்தேசித்து எவ்விதம் எழுதவேண்டும்? தொழில் புரிபவர்களை உத்தேசித்து எவ்விதம் எழுதவேண்டும்? என்றப் பிரச்னைக்கு இப்பொழுது அவஸரமேற்படவில்லை. இப்பொழுது எல்லோருமே மாணாக்கர்கள் நிலைமையில்தான் இருக்கின்றனர் என்றெண்ணிக் கொண்டு, முதலில் மாணாக்கர்களைக் கருதியே புதிய பாட புஸ்தகங்கள் வெளியிடப்பட வேண்டும். மேற்கொண்டு நாளடைவில் மாணவருக்கும் தொழில் புரிபவருக்கும் தகுதியான தனிமுறையில் நூல்களின் விஸ்தாரம் தானாக வளரும்.

புதிய பாட புஸ்தகங்கள் ஸம்ஸ்கிருத பாஷையில்தான் முதலில் எழுதி வெளியிடப்பட வேண்டும். பின்பு அவசியமாயின் பிராந்திய பாஷைகளில் அவைகளின் மொழிபெயர்ப்பு விரிவுரை உருவத்தில் செய்யப்படலாம் மொழி பெயர்ப்பிலும் பரிபாஷை பதங்கள் பூராவும் ஸம்ஸ்கிருதத்தில் ஒரேமாதிரியான வார்த்தையில்தான் பிரயோகிக்கப்பட வேண்டும். அல்லாவிடில் பாரத நாட்டில் தனித்தனி பிராந்தங்களில் இருக்கும் வைத்தியர்களிடையே சாஸ்திரீயமான விஷயத்தில் வியவகாரம் நடத்துவது முடியாமலாகும். ஹிந்தீ உதவாது ஏனெனில் இன்னமும் ஹிந்தீ பாஷை அகில பாரத நாட்டிலும் பூர்ணமாய் பரவவில்லையென்பது ஒன்று இரண்டாவது அதில் சாஸ்திரீய விஷயங்களை முற்றிலும் எடுத்துக்காட்டப் பூர்ணமான சக்தியுள்ள சப்தங்களும் தீர்மானிக்கப்படவில்லை

ஆங்கில மொழியும் பிரயோஜனமில்லை ஏனெனில், அது விதேசமொழி என்ற ஒரு காரணம் மட்டுமல்ல. "वागतिगन्धयो रितिवायुः" என்றது போன்ற ஆயுர்வேதத்தின் தத்வஸாரங்களை பதத்தினாலேயே ஞானம் உண்டாக்கக்கூடியதான சக்தி ஆங்கில பாஷைக்குமில்லை.

ஸம்ஸ்கிருதமோ ஆயுர்வேதத்தைப்பற்றிய வரையில் எல்லா மொழிகளைக்காட்டிலும் இன்றைக்கும் அகில பாரத தேசத்திலும் வியாபகமாய் இருக்கிறது. தவிரவும் ஆயுர்வேதம் முதலிய பிராசீன சாஸ்திரங்களுடைய தத்துவத்தை எடுத்து விளக்க ஸம்ஸ்கிருதம் ஒரு பாஷையில்தான் பூர்ணமான ஸௌகர்யம் இயற்கையில் அமைந்துள்ளது என்ற விஷயம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

புதிதாய் பாட புஸ்தகங்களை எழுதுவதில் ஆயுர்வேதத்தில் எட்டு அங்கங்கள் என்று பூர்வாசார்யர்களால் கற்பிக்கப்பட

படியே அங்கங்களுக்கு எட்டு என்ற எண்ணிக்கையை இப்பொழுதும் அநுஸரிக்கவேண்டியதில்லை. மூல தர்சனம் அல்லது ஸூத்ரஸ்தானம் திரவ்யகுணம், சாரீரம், பிரஸூதி தந்திரம் நிதானம், சல்யம் மானஸரோகங்கள், காயசிகித்ஸை, அகதம், சக்ஷுர்வேதம், தந்தபைஷஜ்யம் இதுமாதிரி விதங்களில் காலத்திற்கேற்றபடி விஸ்தாரப்படி அதிக அங்கங்களை விஷயமாக்கி ஏற்படுத்துவதே நல்லது.

நூல்களை இயற்றுவதில் அநுசரிக்கவேண்டிய கிரமமாவது:-

முதல் காரியம்:— அச்சாகியிருக்கும் ஆயுர்வேத நூல்கள் அனைத்திலிருந்து விஷயங்களைத் தனித்தனி அங்கங்களில் பிரிவினை செய்து சேகரித்து பரிபாஷைக் கஷ்டமும், புநருக்தி தோஷமும் இல்லாமல் பிராசீனமான ஸம்ஸ்கிருத ஸாஹித்யத்திலேயே நூல்களை எழுதியமைக்கவேண்டும். மிகவும் ஸந்தேஹமான இடங்களையும் இக்காலத்தில் உபயோகமில்லாத சில இடங்களையும் சேர்க்காது விட்டுவிடலாம்.

இரண்டாவது காரியம்:— மலையாளம், தமிழ் முதலிய பிராந்த பாஷைகளில் இருக்கும் ஆயுர்வேத விஷயங்கள் என்ன? ஸித்த வைத்தியமென்ன? உருதுவிலிருக்கும் யூனானி வைத்தியமென்ன? எல்லாவற்றையும் அவைகளைக் கற்றறிந்தவர்களுடைய உதவியால் நன்றாய் பரிசீலனம் செய்து, ஆயுர்வேத நூல்களில் அகப்படாமல் அவைகளில் உபயோகமாயுள்ள புதிய அம்சங்கள் அகப்படின் அவைகளை ஆயுர்வேதத்தின் அந்தந்த அங்கங்களில் ஸம்ஸ்கிருத பாஷையில் ஆயுர்வேத பரிபாஷையில் எழுதிச் சேர்த்துக்கொள்ளவேண்டும் இக்காரியம் செய்து முடிந்தால் பழைய இந்திய வைத்தியத்திற்குப் புதிதாய் கற்பிக்கப்பட்ட, ஆயுர்வேதம் ஸித்தம்—யூனானி என்ற பிரிவு, ஒருக்கால் அரசியல், வியவகாரத்தில் அதிகநாள் ஜீவித்தாலும் சாஸ்திர விஷயத்தைப் பற்றியவரை மறைந்துவிடும். இந்திய வைத்தியமென்பது ஆயுர்வேதமொன்றுதான் என்று திரும்ப விளங்கும்.

மூன்றாவது காரியம்:— அலோபதிக் முதலிய வெளிநாட்டு புதிய வைத்திய சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் ஆயுர்வேதக் கொள்கையின்மூலம் ஆராய்ந்து பார்த்து, ஆயுர்வேதத்தில் சொல்லப்படாமல் அவைகளிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டிய சிகித்ஸைக்கு உபயோகமான பாகங்களை எல்லாம், ஆயுர்வேத பரிபாஷையில் ஸம்ஸ்கிருதத்தில் எழுதி அந்தந்த அங்கங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மூன்றுவிதக் காரியங்களில் முதலும் இரண்டாவதும் எளிதிற் செய்யக்கூடியது. ஆதலால் இவைகளை உடனே

199598

முடித்து அகில பாரதத்தில் எல்லா ஆயுர்வேத வித்யாலயங்களிலும் ஒரேமாதிரியான பாடக்கிரமத்தை அமுலுக்குக் கொண்டு வரமுடியும். மூன்றாவது காரியத்தை விசேஷமான ஆராய்ச்சிகளால் நாளடைவில் செய்து முடிக்கவேண்டும்.

ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்கு பரீக்ஷையும், ஸமந்வயமும் செய்யப்படாமல் ஆலோபாதிக் வைத்திய முறையை அப்படி அப்படியே ஆயுர்வேதம் பயிலும் இளம் மாணாக்கருக்குப் போதிப்பதினால் ஆயுர்வேதத்திற்கு ஸொந்த முறையில் மேல் மேல் வளர்ச்சி வழி முற்றிலும் அடைபட்டுவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆயுர்வேத ஆராய்ச்சித் துறைகளில் செய்யவேண்டிய பற்பல காரியங்கள், பலவிடங்களில் தனித்தனியாக நடத்தப்படினும், ஸகல காரியங்களும் அகில பாரத தேசத்திலும் வியாபகமான ஒரு நிர்மாணத்திட்டத்திலேயேதான் நிறுவப்பட்டு அநுஷ்டிக்கப் படவேண்டியது என்ற முக்கிய விஷயம் எப்பொழுதும் நினைவிலிருக்கவேண்டியது அவசியமாகும்.

ஜய ஆயுர்வேத,

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17 சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karur.